sns academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**பெயர்: ______ விளக்கச்சோதனைத் தேர்வு – 2(2022-2023) வகுப்பு: ஆறு**

**பாடம் : தமிழ் தேதி: 22.08.2022**

**மதிப்பெண்கள் : 40 காலஅளவு: 1 ½ மணிநேரம்**

**இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

**பிரிவு : அ படித்தல் - 5 மதிப்பெண்கள்**

**பிரிவு : ஆ எழுதுதல் - 5 மதிப்பெண்கள்**

**பிரிவு : இ இலக்கணம் - 13 மதிப்பெண்கள்**

**பிரிவு : ஈ இலக்கியம் - 17 மதிப்பெண்கள்**

---

- **கேட்கப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

## பகுதி - அ

I. **பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. (5x1=5)**

உலகில் உள்ள சுவையான மீன்களில் முதன்மையானது அலாஸ்காவின் தேசிய மீனான கிங் சால்மன் ஆகும். இம்மீன் அலாஸ்கா அரசின் வருமானத்திற்கு அதிகமாக உதவுகிறது. இவ்வகை மீன் நல்ல நீரில் உற்பத்தியாகிறது. பிறந்த சில மாதங்களில் பல்லாயிரம் மைல்கள் பயணம் செய்து கடலை அடைகிறது. மூன்று , நான்கு ஆண்டுகளுக்கு பிறகு மீன் பிடிப்பவர், கரடிகள் , பருந்துகளிடமிருந்து தப்பி பிழைத்து கூட்டம் கூட்டமாக அருவி வேகம் எதிர்படும் போது மேல்நோக்கிப் பாய்ந்து செல்வது கண்ணுக்கினியதான காட்சியாகும். கிரிஸ்ஸி கரடிகள் மீன் பிடிக்கப் படும்பாடு மற்றொரு அரிய காட்சி. சால்மன் மீன்கள் சுமார்

பத்தாயிரம் முட்டைகள் இடும். இதற்காக நூற்றுக் கணக்கான மைல்கள் நீந்த வேண்டும். முட்டைகளைப் பெண் மீன்களும் ஆண் மீன்களும் காக்கும். பெரிய சால்மன் மீன்கள் பிறந்த குஞ்சுகளைப் பார்த்த படியே இறந்து விடும்.

**வினாக்கள்.**

1. கிங் சால்மன் மீன்கள் ________________ உற்பத்தியாகிறது.

   (அ) கடலில் (ஆ) நல்ல நீரில்

   (இ) குளங்களில் (ஈ) ஏரிகளில்

2. அலாஸ்கா அரசின் வருமானத்திற்கு அதிகமாக உதவுவது _________.

   (அ) தங்கம் (ஆ) வைரம்

   (இ) கிங் சால்மன் மீன்கள் (ஈ) அலாஸ்கா

3. சால்மன் மீன்கள் எத்தனை முட்டைகள் இடும்?

   (அ) இரண்டாயிரம் (ஆ) முப்பதாயிரம்

   (இ) ஆறாயிரம் (ஈ) பத்தாயிரம்

4. பெரிய சால்மன் மீன்கள் இறப்பு _____________ நிகழும்.

   (அ) பருந்துகளால் (ஆ) பிறந்த குஞ்சுகளைப் பார்த்த படியே

   (இ) எதிரிகளால் (ஈ) மீன் பிடிப்பவர்களால்

5. __________________ இம்மீன்களை உண்ணும்.

   (அ) கிரிஸ்ஸி கரடிகள் (ஆ) புலிகள்

   (இ) சிங்கங்கள் (ஈ) முதலைகள்

**பகுதி - ஆ**

**II. கீழ்க்காணும் படத்தைப் பார்த்து அதைப் பற்றி 5 வரிகள் எழுதுக.** (5)



## பகுதி - இ

**III. நிரப்புக.** **(13x 1=13)**

7. முதலெழுத்துகள் மொத்தம் ________________.

(அ) அறுபது (ஆ) பத்து (இ) முப்பது

8. ஆய்த எழுத்தின் வேறு பெயர் ____________ .

(அ) உயிர்மெய் (ஆ) அஃகேனம் (இ) சார்பெழுத்து

9. சார்பெழுத்து வகைகளுள் ஒன்று ____________.

(அ) மகரக்குறுக்கம் (ஆ) உயிர் (இ) மெய்

10. ஆய்த எழுத்து சொல்லின் ______________ மட்டுமே வரும்.

(அ) முதலில் (ஆ) இறுதியில் (இ) இடையில்

11. முதலெழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் ________________

(அ) சார்பெழுத்துகள் (ஆ) மெய் எழுத்துகள் (இ) முதலெழுத்துகள்

12. உயிர்மெய் எழுத்துகள் மொத்தம் ___________________.

(அ) 222 (ஆ) 247 (இ) 216

13. திங்கள் என்பதன் பொருள் ___________________.

(அ) சந்திரன் (ஆ) கதிரவன் (இ) ஞாயிறு

14. திருவள்ளுவர் _______________ ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.

(அ) முப்பதாயிரம் (ஆ) இரண்டாயிரம் (இ) ஆயிரம்

15. உலகப் பொதுமறை என்றழைக்கப்படும் நூலின் பெயர் _____________.

(அ) நாலடியார் (ஆ) சிலப்பதிகாரம் (இ) திருக்குறள்

16. ஒருவர்க்குச் சிறந்த அணி ___________________.

(அ) மாலை (ஆ) வன்சொல் இ) இன்சொல்

17. வழி + தடம் - என்ற சொல்லைப் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?

(அ) வழித்தடம் (ஆ) வழிதடம் (இ) வழித்டம்

18. நுட்பமான ஒலிப்பு முறையை உடைய எழுத்து ________.

(அ) ஆய்தம் (ஆ) மெய் (இ) உயிர்

19. கிழவனும் கடலும் என்ற நாவல் ______________ பரிசு பெற்றது.

(அ) அரசு (ஆ) நோபல் (இ) மத்திய

**பகுதி - ஈ**

**IV. பின்வரும் குறுவினாக்களுக்கு விடையளி. (4x2=8)**

20. இரட்டைக்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

21. வலசையின் போது உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

22. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

23. பாரதியார் வணங்கும் தெய்வத்தின் பெயர் என்ன?

**V. பின்வரும் சிறுவினாக்களுக்கு விடையளி. (3x3=9)**

24. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?

25. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

26. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?